

பெரம்பலூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் ரூ.1.85 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள், அரசு தலைமை மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள சித்த மருத்துவப் பிரிவு கட்டடங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ், தலைமையில் கை.களத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திறந்து வைத்தார்கள். அருகில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண்நேரு, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் சி.ராஜேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில் - ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள்

# அரசு தலைமை மருத்துவமனையில் - சித்த மருத்துவப் பிரிவு கட்டடங்கள்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தனர்!

*பெரம்பலூர், நவ. 7-*

பெரம்பலூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் ரூ.1.85 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள், அரசு தலைமை மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ளசித்த மருத்துவப்பிரிவு கட்டடங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ், தலைமையில் நேற்று முன்தினம் (05.11.2024) கை.களத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திறந்து வைத்தார்கள்

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண்நேரு, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அதன் விபரம் வருமாறு:-

கை.களத்தூர் மற்றும் அரும்பாவூரில் தலா ரூ.60 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்களையும், கல்பாடி மற்றும் குருமுபலூர் பகுதிகளில் தலா ரூ.20 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலைய கட்டடங்களையும், பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.25 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள சித்த மருத்துவப்பிரிவு கட்டடத்தையும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் ஆகியோர் திறந்து வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்த தாவது

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் பல கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றது. ரூ.45 இலட்சம் மதிப்பில் பெரம்பலூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் கட்டண படுக்கை பிரிவு கட்டிடப்பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. விரைவில் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும். சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவ மனையில் மட்டுமே இருந்த கட்டண படுக்கை பிரிவுகள் தற்போது மாநிலம் முழுவதும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது,.

பெரம்பலூர் மாவட்டத்தில் குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆதனூர், மருவத்தூர், கொளக்காநத்தம், இலப்பைகுடிகாடு, கூடலூர், அகரம் சீகூர் மற்றும் சிறுகன்பூர் பகுதிளிலும், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பசும்பலூர், வாலிகண்டபுரம், அம்மாபாளையம், சிறுவயலூர், செஞ்சேரி மற்றும் லாடபுரம் கிழக்கு ஆகிய பகுதிளிலும் மொத்தம் ரூ. 7.75 கோடி மதிப்பில் துணை சுகாதார நிலையம், வட்டார பொது சுகாதார அலகு, ஆரம்பசுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

முதலமைச்சர் அவர்கள் 06.06.2023 அன்று ரூ.25 இலட்சம் செலவில் பெரம்பலூர் நகராட்சியில், அரணாரை நகர்புற நலவாழ்வு மையத்தை காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்கள். போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று ரூ.1.20 கோடி மதிப்பில் கீழப்புலியூர் ஊரக ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. விரைவில் அந்த புதிய ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவர்கள், செவிலியர்கள் நியமனம் செய்வதற்கான ஆணை நதித்துறை யிடமிருந்து பெறப்பட்டு, ஆரம்ப சுகாதார நிலையம் மக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்படும். விரைவில் தமிழ்நாட்டில் 50 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றம் நகர்ப்புற சுகாதார நிலையங்கள் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட வுள்ளது.

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் காரை, கிருஷ்ணாபுரம், வேப்பூர், உடையார்பாளையம் மற்றும் செந்துறை ஆகிய 5 மருத்துவமனைகள் உள்ளதாக இணை இயக்குநர் தெரிவித்தார். இந்த மருத்துவமனைகளில் மருத்துவர்களுக்கான பணியிடத்தை நிரப்பாமல், தரம் உயர்த்தியுள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபிறகு கிருஷ்ணாபுரம் அரசு மருத்துவ மனைக்கு ரூ.3.50கோடி மதிப்பில் புதிய கட்டடம் கட்டுவதற்கு ஆணைவழங்கப் பட்டுள்ளது. காரை அரசு மருத்துவமனையில் 20கோடி மதிப்பில் புதிய கட்டடம் கட்டும் பணியும், வேப்பூர், உடையார்பாளையம், அரசு மருத்துவமனைகளில் தலா ரூ.3.50கோடி மதிப்பில் புதிய கட்டடங்கள் கட்டப்படவுள்ளது.

செந்துறை அரசு மருத்துவமனையில் ரூ.23.75 கோடி மதிப்பில் தீவிர சிகிச்சைப் பிரிவிற்கான கட்டடம் கட்டுவதற்கு பணிகள் நடைபெற்று வருகின்றது. கடந்த கால ஆட்சியில் பெயர் பலகையில் மட்டுமே அரசு மருத்துமனைகளாக தரம் உயர்த்தப்பட்டவை தற்போது புதிய கட்டடங்கள், புதிய பணியிடங்கள் என வளர்ச்சியடைந்துள்ளது.

2024-25 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், லப்பைக்குடிக்காடு வடக்கு, லப்பைக்குடிக் காடு தெற்கு, பெரம்பலூர் தெற்கு, சாமியப்பாநகர், பாளையம் ஆகிய பகுதிகளில் ரூ.2.25 கோடி மதிப்பில் துணை சுகாதார நிலையங்கள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர், முத்துலட்சுமி மகப்பேறு நிதிஉதவித்திட்டம், மக்களைத்தேடி மருத்துவம் திட்டம், யானைக் கால் நோய்தடுப்பு திட்டம், தேசிய தொழுநோய் தடுப்பு திட்டம், கண்ணொளி காப்போம் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்களின் கீழ் பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை அமைச்சர் பெருமக்கள் வழங்கினார்கள்.

முன்னதாக காரை மற்றும் கிருஷ்ணாபுரத்தில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டு அடிப்படைவசதிகள் குறித்து பார்வையிட்டு, உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டுள்ளவர்களிடம் அளிக்கப் படும் மருத்துவ சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் சி.இராஜேந்திரன், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை (சென்னை) இணை இயக்குநர் (ஆரம்ப சுகாதார நிலையங்கள்) மரு.செந்தில்குமார், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி (ஆலத்தூர்), ராமலிங்கம் (வேப்பந்தட்டை), இணை இயக்குநர் மரு.மாரிமுத்து, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.எம்.கீதா, அட்மா தலைவர் வீ.ஜெகதீசன், மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் மரு.ஜாக்குலின் சித்ரா, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பி னர்கள் திருமதி மகாதேவி ஜெயபால், டி.சி.பாஸ்கர், மரு. கருணாநிதி ஒன்றியக் குழு உறுப்பினர் நவமணி குமரி ஆனந்தன், முன்னாள் எம்.எல்.ஏ. துரைசாமி, கைகளத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி சுமதி முருகேசன், வேப்பந்தட்டை மருத்துவ அலுவலர் மரு. பிரேம் குமார் மற்றும் உள்ளாட்சி அமைப்பு களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





கழக தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட விராலிமலை கிழக்கு ஒன்றிய பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி, மாவட்டப் பொருளாளர் புதுக்கோட்டை துணை மேயர் எம்.லியாகத் அலி, ஒன்றிய செயலாளர் மு.பி. ம.சத்தியசீலன் ஆகியோர் முன்னிலையில் களமாவூர் அழகு நாச்சியம்மன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. விராலிமலை சட்டமன்ற தொகுதி பார்வையாளர், கழக மருத்துவரணி துணை செயலாளர் தஞ்சாவூர் துணை மேயர் டாக்டர் அஞ்சுகம் பூபதி தேர்தலில் கழகம் வெற்றி பெற வழிமுறைகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார்..நிகழ்வில் ஒன்றிய அவைத்தலைவர் நேரு, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் விளாப்பட்டி சிவா, செல்லத்துரை, மாவட்ட கவுன்சிலர் கை.பழனிச்சாமி உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் பங்கேற்றனர்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**வரத. கோபாலகிருஷ்ணன்**
**நவம்பர் 7 (2001)**



திருவாரூர் மாவட்டக் கழகப் பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஒன்றியப் பெருந்தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

நன்னிலம் பகுதியில் கழகம் வளர்க்க பாடுபட்டவர். வாழ்நாள் முழுவதும் இயக்கப் பணிகளுக்காக தன்னையே அர்ப்பணித்தவர்.

நெருக்கடி நிலையின்போது ஓராண்டு சிறைவாசம். மேலும், கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க ஒன்றிய, நகர வாரியாக

# வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர், டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!



கழக தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சேலம் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட எடப்பாடி, சங்ககிரி, மேட்டூர் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக பாக நிலை முகவர்கள் (BLA -2) ஆலோசனைக் கூட்டம் சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி தலைமையில், தொகுதி பார்வையாளர்கள் எடப்பாடி தொகுதி - திருமதி. நாமக்கல் ப.ராணி, மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர், சங்ககிரி தொகுதி - ஆர்.பி.செந்தில்குமார், மாநில சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர், மேட்டூர் தொகுதி - திருமதி. அ.ரியா மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் ஆகியோர் முன்னிலையில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெற உள்ளது.

| | | மேட்டூர் தொகுதி | |
|---|---|---|---|
| **தேதி** | **நேரம்** | **ஒன்றியம் / நகரம்** | **இடம்** |
| 07.11.2024 | காலை 9.00 | கொளத்தூர் ஒன்றியம் | கே.பி.என். மில் வளாகம், கொளத்தூர் |
| 07.11.2024 | காலை 11.00 | மேட்டூர் நகரம் | முகமது அலி விளையாட்டு கூட்ட அரங்கம், பியர்ட்செல் கார்டன், மேட்டூர் - 1. |
| 07.11.2024 | மதியம் 3.00 | நங்கவள்ளி ஒன்றியம் | சமத்துவபுரம் சமுதாயக்கூடம், கோனூர். |
| 07.11.2024 | மாலை 4.00 | மேச்சேரி ஒன்றியம் | பசுபதிஸ்வரர் மஹால், மேட்டூர் மெயின்ரோடு, மேச்சேரி. |
| | | **எடப்பாடி தொகுதி** | |
| 08.11.2024 | காலை 9.00 | எடப்பாடி நகரம் | டி.எஸ்.எம்.பாஷா, நகர செயலாளர் இல்லம், நைனாம்பட்டி. |
| 08.11.2024 | காலை 10.30 | கொங்கணாபுரம் ஒன்றியம் | சண்முகா ஜின்னிங் பேக்டரி, மேல் மில், மொரம்புகாடு. |
| 08.11.2024 | மதியம் 12.00 | நங்கவள்ளி ஒன்றியம் & மேச்சேரி ஒன்றியம் | ரங்கண்ணா திருமண மண்டபம், வனவாசி. |
| 10.11.2024 | மாலை 4.00 | எடப்பாடி ஒன்றியம் | ஸ்ரீ கிருஷ்ணா மஹால், சித்தூர். |
| | | **சங்ககிரி தொகுதி** | |
| 10.11.2024 | காலை 9.00 | சங்ககிரி ஒன்றியம் | ஆர்.கே.எஸ்.மஹால் (மீனாட்சி மண்டபம்), குப்பனூர். |
| 10.11.2024 | காலை 11.00 | மகுடஞ்சாவடி ஒன்றியம் & இடங்கணசாலை நகரம் | சரவணபவன் ஹோட்டல், வைகுந்தம். |
| 10.11.2024 | மதியம் 2.00 | தாரமங்கலம் நகரம் & தாரமங்கலம் மேற்கு ஒன்றியம் | சிவகாமியம்மாள் திருமண மண்டபம், மோட்டுப்பட்டி ரோடு, எம்.ஜி.ஆர் காலனி, தாரமங்கலம். |

அதுசமயம் பாகநிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்திற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கிளைக்கழக செயலாளர்கள், வார்டு கழக செயலாளர்கள், முன்னாள் - இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், பாகநிலை முகவர்கள் (BLA-2) அனைவரும் அந்தந்தஒன்றிய, நகர, பேரூர்பகுதிகளில்நடைபெறும்கூட்டத்திற்குதவறாமல்கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**டி.எம்.செல்வகணபதி எம்.பி.**
செயலாளர்
சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.



தருமபுரி மேற்கு மாவட்டம் காரிமங்கலம் மத்திய ஒன்றியம் உச்சம்பட்டி,திண்டல் உள்ளிட்ட பகுதிகளில் மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் ஒன்றிய கழக செயலாளர் இல.கிருஷ்ணன் ஏற்பாட்டில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி பொதுமக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார்.உடன் ஒன்றிய செயலாளர்கள் எம்வீடி.கோபால்,அடிலம் அன்பழகன்,வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகர் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**க. வேல்சாமி**
**நவம்பர் 7 (2007)**



இளம் வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

நாமக்கல் மாவட்டம், மோகனூர் பகுதியில் முதன்முதலாக பல்வேறு கிளைக் கழகங்களை அமைத்தவர்.

மோகனூர் கிளைக் கழகம் அமைத்து, அதன் செயலாளர் பின்னர் மாவட்ட பிரதிநிதி என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1996ல் நாமக்கல் தொகுதியில் கழக சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**